## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No. 291 of 2018**

| | |
|---|---|
| **பெயர்** | : அம்பிகா |
| **கணவர் பெயர்** | : குப்புராஜ் |
| **வயது** | : |
| **தொழில்** | : |
| **முகவரி** | : |

1969ம் ஆண்டு 14வது சட்டத்தின் படி 12வது பிரிவின் கீழ் 18.06.2026 அன்று திரு. **M.** ராஜகுமரேசன், **B.Com., L.L.B.,** முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, கடலூர் அவர்களால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் 1-ம் பிரதிவாதி ஆவேன். என்னை பிரதிவாதி தரப்பு சாட்சி - 1 ஆக விசாரணை செய்யவும் எனது முதல் விசாரணையை பதிவு செய்யவும் ஆஜராகியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் படித்துக்காண்பிக்கப்பட்டது என்றும் சத்தியமாய் சொல்கிறேன்.

ஆவணங்கள் 1 முதல் 5 குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

1. வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. வழக்கில் வாதி என்ன விவரங்கள் சொல்லியுள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது எதிர் உரையில் உள்ள விவரஙகள் நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியும். வழக்கின் சொத்து விவரம் மற்றும் அளவு பத்திரம் பார்த்தால் தான் எனக்கு தெரியும்.

2. தற்போது நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவர்ங்கள் எனக்கு தெரியும். எனக்கும் எனது கணவருக்கும் ஏற்கனவே விவாகரத்து வழக்கு நீதிமன்றத்தில் இருந்தது. நான் தான் வழக்கு தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் விவாகரத்து அளிக்கப்பட்டது. அந்த உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யபோவதில்லை. விவாகரத்து வழக்கில் நானும் எனது கணவரும் 6 வருடங்களுக்கு மேல் பிரிந்து வாழ்வதாக தான் சொல்லியிருந்தேன். அதன் அடிப்படையில் தான் விவாகரத்து நீதிமன்றத்தில் நான் கோரியிருந்தேன். ஆனால் அதன் பிறகு இருவரும் சமாதானமாகி ஒன்றாக தான் இருந்தோம்.

3. விவாகரத்து பெற்ற பிறகு நான் எனது பெற்றோருடன் தான் இருந்தேன். எனது கணவரும் என்னுடன் இருந்தார். Smart ration card உள்ளது. அதனை நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும் . **அதில் எனது தாயார் வீட்டு முகவரி தான் உள்ளது. எனது பிள்ளைகள் படிப்பு முகவரியும் தாயார் வீட்டு முகவரி தான். நாங்கள் குடியிருப்பதற்கு எனது பெற்றோர்கள் இடம் கொடுத்தார்கள் அந்த இடத்தில் தான் நாங்கள் வாழ்ந்தோம். எனது கணவர் வீட்டிற்கும் நாங்கள் செல்வது வழக்கம். அங்கு எனது மாமியார் மட்டும் தான் இருப்பார்.**

4. **வாதிகள் எனது கணவர்வழி உறவினர்கள் ஆவார்கள். வழக்கு சொத்து எனது மாமியார் கிருஷ்ணம்மாள் பெயரில் இருந்தது மொத்த விஸ்தீரணம் 1000 சதுரடிக்கு மேல் இருக்கும். சாந்தவதி, பாலன், குப்புராஜ் (எனது கணவர்) மற்றும் எனது மாமியார் பிரித்து**

அனுபவித்து வந்தார்கள். 1987ல் எனது நகைகளை விற்று தான் மேற்படி சொத்தை கிரையம் வாங்கினார்கள். அதற்கு ஆவணங்கள் உள்ளது நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்ய முடியும்.

5. எனது கணவர் திருமண சமயத்தில் கடலூர் துறைமுகத்தில் வேலை செய்தார் அதன் பிறகு பல்வேறு இடங்களில் கூலி வேலைகள் செய்தார். நான் எனது கணவருடன் 1992 முதல் பிரிந்து தான் இருந்தோம் என்றால் சரியல்ல. எனது மகள் திருமணத்திற்கு 2018 ம் ஆண்டு பத்திரிக்கை வைக்கும் சமயத்தில் தான் எனது கணவர் இறந்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.வழக்கு சொத்தை நான் ஐயாக்கண்ணு என்பவருக்கு விற்பனை செய்து விட்டேன்.

6. வழக்கு சொத்தில் 2 கடைகள் உள்ளது. 01.06.2022 அன்று தனஜோதி என்பவருக்கு வழக்கு சொத்தை விற்பனை செய்து விட்டேன் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி கிரையம் செய்த விற்பனை ஆவணம் மேற்படி கிரைய ஆவணம் வா.த.சா.ஆ.12 ஆக குறுக்கு விசாரணையின்போது குறியீடு செய்யப்படுகிறது. எனது கணவர் 2017ம் ஆண்டு வாதிகள் விலாசத்தில் தான் இறந்தார் என்றால் சரிதான். ஆனால் எங்கள் வீடு அதே விலாசத்தில் தனியாக உள்ளது அதில் தான் அவர் இறந்தார். அவரது இறப்பு

சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதில் இறந்த இடம் கடலூர் O.T. என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

7. வழக்கு சொத்தை பொருட்டு எனது பிள்ளைகள் 24.12.2019 தேதியிட்ட பொது அதிகார பத்திரம் எனது பெயருக்கு எழுதி கொடுத்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அவர்கள் எழுதி கொடுத்தது மேற்படி ஆவணம் வா.த.சா.ஆ.13 ஆக குறுக்கு விசாரணையின்போது குறியீடு செய்யப்படுகிறது.

8. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வாதிகள் என்மீது வாதிகள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதில் காவல் நிலையத்தில் நான் ஆஜர் ஆனேன். அதன் பிறகு 07.02.2018 அன்றும் வாதிகள் மாவட்ட காலல் கண்காணிப்பாளரிடமும் புகார் அளித்தார்கள் அதன் பெயரிலும் விசாரணைக்கு நான் சென்றேன். மேற்படி புகாரில் நானும் எனது மகனும் மற்றும் பலர் சேர்ந்து அவர்கள் வீட்டிலிருந்து ஆவணங்கள் , நகைகள் மற்றும் பணம் எடுத்து வந்ததாக வாதிகள் புகார் அளித்திருந்தார்கள் ஆனால் அவை அனைத்து பொய் புகார் ஆகும்.

9. அந்த சமயத்தில் எனக்கு ஆதரவாக கவுன்சிலர் செந்தில் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். வாதி தரப்பு சான்றவாணம் 12 ல் அவர் தான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளார்

என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்த வழக்கு சொத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக 7 ஆம் பிரதிவாதி பெயரில் பொய்யாக கிரய ஆவணம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவரின் இறப்பு சான்றிதழில் விலாசம் எண் 86, காசுகடை வீதி, கடலூர் O.T என்று உள்ளது என்றால் சரிதான்.

10. பிரதிவாதி சான்றாவணம் 2 வாரிசு சான்றிதழில் எண் 38/9எ சிங்காரம் தெருவில் குப்புராஜ் வசித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதா்ன். நானும் எனது கணவரும் சேர்ந்து வாழ்ந்து வந்ததற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி சான்றவாணம் 1 குடும்ப அட்டை அசல் ஆவணம் தொலைந்து விட்டதால் நகல் தாக்கல் செய்தள்ளேன். ஸ்மார்ட் கார்டு கடலூர் ஓ.டி விலாசத்தில் இருந்தது தற்போது சிங்காரம் தெரு விலாசத்திற்கு மாற்றம் செய்து விட்டேன்.

11. ஸ்மார்ட் கார்டு கடலூர் ஓ.டி விலாசத்தில் இருந்ததற்கான ஆவணங்கள் உள்ளதா என்று நான் பார்த்து தான் சொல்ல முடியும். நானும் எனது கணவரும் ஒன்றாக வாழ்ந்தது இல்லை என்றாலும் 2018 ம் ஆண்டு வாதி கைவசம் இருந்த ஆவணங்களை எடுத்து சென்று நான் 7ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்தை விற்று விட்டேன் என்றாலும் சரியல்ல

வழக்கு சொத்தை நான் அனுபவித்ததற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. வா.த.சா.ஆ. 12 பக்கம் 5ல் பழைய ஷீட்டு போட்ட கடை சம்பந்தப்பட்ட இடம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு வழக்கு சொத்தின் தன்மை பற்றி தெரியாது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டதால் வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).